சிவகாசியில் அரிசி வியாபாரிகள் கடையடைப்பு

* 268 வினா—திரு. எம். பூபதி: மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1967 மார்ச் 15-ம் தேதி சிவகாசி நகரில் 79 மூட்டை பதுக்கல் அரிசி கொண்டு சென்ற லாரியை, சிவகாசி தாசில்தார் தடுத்து நிறுத்தி அரிசி மூட்டைகளை ரேஷன் கடை மூலம் விநியோகம் செய்ததால் சிவகாசி நகரிலுள்ள அனுமதி பெற்று வியாபாரிகள் ஒருமுகமாக பொது மக்களுக்கு அரிசி விற்பதை நிறுத்தி கடைகளை அடைத்துவிட்டது குறித்து மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்களுக்கும் உணவு அமைச்சர் அவர்களுக்கும் தந்திகளும், மகஜர்களும் வந்தனவா ?

(இ) ஆம் எனில், அவைகள் மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

Hospital for Tiruttani

* 269 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to build a Government Hospital in Tiruttani, Chingleput district; and

(*b*) if so, when it would materialise?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) திருத்தணியில் அரசின் புதிய மருத்துவ மனைக்கான கட்டடங்கள் கட்டும் வேலை, தேவையான நிலங்கள் மருத்துவத் துறையால் எடுத்துக் கொள்ளப்பட்டவுடன் மேற்கொள்ளப்படும்.

THIRU K. VINAYAKAM: Sir, may I know what is the estimate of this building and where is it located and when it would be started?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: The estimate of the building is Rs. 6.89 lakhs. The Government are taking steps to acquire lands at Amirthapuram village and it will be implemented soon.

Underground drainage for Chingleput

* 270 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal for provision of underground drainage system to Chingleput Municipality; and

(*b*) if so, the financial implications of that scheme?

1967 ஜுலை 11

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) தற்போது செங்கல்பட்டு நகராட்சியில் புதைவடிகால் அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

THIRU K. VINAYAKAM : Sir, may I know whether any request was made by the Chingleput Municipality regarding the underground drainage system, what is the grant which they wanted from the Government and whether the Government have decided to oblige them with that grant?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : I have no information about it.

"அரவட்லா" மலைமீது சாலை அமைத்தல்

*271 வினு—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பரா—

குடியாத்தம் தாலுக்காவிலுள்ள "அரவட்லா" மலைமீதுள்ள கிராமங்களுக்கு செல்ல ரோடு போடும் விஷயம் தற்போது என்ன நிலையிலுள்ளது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : பஞ்சாயத்து நிறுவனம் இவ்வேலையை நிதி நிலைமைக்கேற்றபடி பகுதி பகுதியாக மேற்கொள்ளும். இவ்வருடம் ஒரு பகுதியில் வேலை நடக்கும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இது பேரணும்பட்டு தொகுதியைச் சேர்ந்த பிரதேசம். அந்த மலையில் நாலைந்து கிராமங்கள் உள்ளன. இன்றும் அந்த மலையில் வசிக்கும் மக்களுக்குத் தேவையான உணவாக இருந்தாலும் சரி அல்லது எதுவாக யிருந்தாலும்சரி மலைக்கு மேலே கொண்டு போகவும், கீழே கொண்டு வரவும் உள்ள ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களை கழுதைகளின் மேல்தான் எடுத்துச் செல்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? பாரஸ்ட் கண்ட்ராக்டர்ஸ், கண்ட்ராக்ட் எடுப்பவர்கள் சில ரோடுகளை ஃபார்ம் செய்திருக்கிறார்கள், விறகு போன்றவைகளைக் கொண்டு செல்வதற்கு. ஆகவே அந்த ரோடுகளை செப்பனிட்டு நல்ல ரோடுகளாகப் போடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அந்தப் பாதையின் நீளம் ஆறு மைல் தூரம். கழுதைகளின் மேல் ஏற்றிச் செல்வது பற்றி விவரங்கள் இல்லை. நிதிநிலைமை இடம் கொடுக்கிற வகையில் முயற்சி எடுக்கப்படும். நிதிநிலைமை கட்டுப்பாடு காரணமாக பகுதி பகுதியாக எடுத்துக் கொண்டு நடைமுறைப்படுத்தப் படுகிறது.